மலேரியா நோய் பரவுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

அவைமுன் ஒரு விவர * அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மறுவாழ்வு இல்லங்களில் இருந்து வெளி வந்தவர்கள்.

* வினா எண் 398. திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) அரசு மறுவாழ்வு இல்லங்களில் சிகிச்சை பெற்று வெளிவந்த தொழு நோயாளிகள் இதுவரை எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புக்கு ஏதேனும் வசதி செய்து கொடுத்துள்ளதா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி :—

(அ) 77 நபர்கள்.

(ஆ) ஆம்.

Leprous beggars.

* Q. No. 399 Thiru K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(a) the steps taken to round up all the leprous beggars in the streets of Madras City; and

(b) the action taken to segregate them from the public?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :—

(அ) மற்றும் (ஆ)

சென்னை நகரில் தெருக்களில் அலையும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை அப்போதைக்கப்போது சென்னை நகர காவல்துறையினர், 1945ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுத்தல் தடுப்புச்சட்டத்தின்கீழ் பிடித்து வழக்கு பதிவு செய்கின்றனர். குற்றவியல் நீதிபதியால் தண்டிக்கப்படுபவர்கள் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக தமிழ்நாட்டில் அரசு ஏற்படுத்தியுள்ள பத்து மறுவாழ்வு இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர்.

[*120, 121-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]

1979 மார்ச் 14]

தெருக்களிலும், பொதுமக்கள் கூடுமிடங்களிலும், பொது மக்களுடன் தொழுநோய்ப்பிச்சைக்காரர்கள் கலந்து இருக்காதபடி காவல்துறையினர் கண்காணித்து அவர்களை அகற்றி விடுகிறார்கள். ரயில் நிலையங்கள், கடைவீதிகள், ஆலயங்கள், கடற்கரை முதலிய இடங்களில் சென்னை நகரத்தில் பகற்பொழுதில் பிச்சைக்காரர்களை வளைத்துப் பிடிக்கவும் அதற்கான தீவிர தனி நடவடிக்கை எடுக்கவும், தனது பணியாளர்கள், பிச்சைக்காரர்கள் மீது வழக்குகள் பதிவு செய்வது குறித்து காவல்துறைத் துணை ஆணையாளர் ஆய்வு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

[முற்பகல் 10.00]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) துணைக் கேள்விகள் அனுமதிப்பது குறித்து.

திரு. துரை கோவிந்தராஜன்: கேள்வி நேரத்தின் போது, ஆளும்கட்சி தரப்பிலிருந்து ஐந்தாறு பேர்களுக்கு மட்டுமேதான் சந்தர்ப்பம் தந்திருக்கிறீர்கள். இனிமேலாவது ஆளும்கட்சித் தரப்பிலுள்ள உறுப்பினர்களுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்பதற்கு இடம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கைதட்டல்..)

திரு. சி. ஆறுமுகம்: கேள்வி நேரத்தில் எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புத் தர வேண்டும். அது தான் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு இதில் என்ன சங்கடம் என்று தெரியவில்லை.

(திரு. கு. ரமணி, திரு. எஸ். ஆர். இராதா ஆகியோர் எழுந்திருந்தார்கள்..)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேர்களும் எழுந்து நின்றால் நான் யாரை அழைப்பது? நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள். திரு. ரமணி